# தும்பனே பிரதேச சபை

## கண்டி மாவட்டம்

-------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

-----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 ஏப்ரல் 09 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 02 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 23 திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

-------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களின் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான தும்பனே பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகள் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டு கொள்கைகள்

--------------------------------------

கணக்கீட்டு கொள்கைகள் நிதிக் கூற்றுக்களுடன் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டு குறைபாடுகள்

--------------------------------------

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) பிரதான செயலாளரிடம் கிடைத்திருந்த இலக்கம் 52 – 6571 கொண்ட கப் வண்டியின் மற்றும் பொதுசன நீர் மற்றும் உடல் ஆரோக்கிய செயற்திட்டத்தில் இருந்து கிடைத்திருந்த இலக்கம் MO-4949 கொண்ட மோட்டார் சைக்கிள் சபைக்கு உரித்தாக்கி அதனது பெறுமதியின் மதிப்பீடு செய்து, கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஆ) முதலமைச்சில் இருந்து கிடைத்திருந்த ரூபா 2,300,000 இற்கான இலக்கம் 301 – 5762 கொண்ட மோட்டார் வண்டியை சபைக்கு உரித்தாக்கி கணக்கீடு செய்திருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ரூபா 568,084 இற்கான நிலுவை நீர் கட்டணம், ஐந்தொகையில் ரூபா 359,027 என பதிவு

செய்யப்பட்டிருந்தமையால், ரூபா 209,057 தொகை குறைவாக, கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுபாட்டு கணக்குகள்

---------------------------------------------------------------------------

06 கணக்கு விடயங்கள் தொடர்பாக குறிப்பிட்ட கட்டுபாட்டு கணக்குகளின் பிரகாரம் மீதிகள், பட்டோலைகளின் பிரகாரம் மீதிகளுடன் ஒப்பீடு செய்யும் போது ரூபா 7,310,394 இற்கான இணங்காமையொன்று வெளிப்படுத்தப்பட்டது.

1.3.4 பெறவேண்டிய கணக்குகள்

----------------------------------------

2013 திசெம்பர் 31 திகதிகள் உள்ளவாறு 04 பெற வேண்டிய கணக்குகளில் மீதிகளின் கூட்டுப் பெறுமதி ரூபா 2,576,495 தொகையாக காணப்பட்டதுடன், அவற்றில் 01 வருட காலத்தை மிகைத்துள்ள கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,257,586 ஆக காணப்பட்டது. அம் மீதியில் இருந்து 2014 செப்டம்பர் 30 திகதியில் உள்ளவாறு ரூபா 66,169 இற்கான தொகை ஒன்று தொடர்ந்தும் அறவிடப்பட வேண்டியிருந்தது.

1.3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

----------------------------------------------------------------------------------------------------

இலங்கை குடியரசின் நிதிப் பிரமாண கோவையின் நி.பி. 756 இன் பிரகாரம் ரூபா 412,876 பெறுமதியான மின்சார துனைக்கருவிகள் பண்டக கணிப்பீட்டிற்காக ஈடுபடுத்தியிருக்கவில்லை.

2 நிதி மீளாய்வு

--------------------

2.1 நிதி விளைவுகள்

--------------------------

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,622,755 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் போது மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 3,195,460 ஆக காணப்பட்டமையால், நிதி விளைவுகளில் ரூபா 1,572,705 இற்கான குறைவொன்று காணப்பட்டது.

2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

---------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான மிகைனய முன்னைய ஆண்டிற்கான மிகையுடன் ஒப்பீடு செய்யும் போது, ரூபா 1,572,705 இற்கான குறைவு ஒன்று அவதானிக்கப்பட்டதுடன் அதற்காக மீளாய்வாண்டு வீதவரி நூற்றிற்கு 6.42 இனால் குறைதல் அதே போலவே வழங்கல்கள் உபகரணங்களால் நூற்றிற்கு 37 உம், மூலதனச் சொத்துக்கள் திருத்தங்களும் பராமரிப்பு நூற்றிற்கு 113 இனாலும், உதவி நிதி நூற்றிற்கு 39 இனாலும் அதிகரித்தல் உட்பட 08 செலவு விடயங்களின் அதிகரிப்பு காரணமாக அமைந்துள்ளது.

2.3 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

---

மீளாய்வாண்டின் போது மொத்த நடைமுறை சொத்துக்கள் மற்றும் நடைமுறை பொறுப்புக்களிடையே விகிதாசாரம் 1:74 ஆக காணப்பட்டதுடன், முன்னைய ஆண்டின் போதான அந்த விகிதாசாரம் 1:60 ஆக காணப்பட்டதுடன் அவை உச்ச மட்டத்தில் காணப்படவில்லை என அவதானிக்கப்பட்டது. மேலும், ஒட்டுமொத்த நடைமுறை சொத்தக்களில் நூற்றிற்கு 83 எனப்படும் ரூபா 28 மில்லியன் நிர்மாண வேலைகள் மற்றும் பலவின கடன்பட்டோர் காணப்பட்டதுடன், மொத்த நடைமுறை பொறுப்புக்களில் நூற்றிற்கு 59 அதாவது ரூபா 26 மில்லியன் நிர்மான வேலை மற்றும் பலவின கடன்கொடுத்தோர் அடங்கியிருந்தது.

2.4 வருமான நிருவாகம்

---

2.4.1 வாடகை

---

2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்படவேண்டிய ரூபா 251,141 இற்கான மீதியில் இருந்து ரூபா 50,169 தொகை ஒன்று 2014 செப்டம்பர் 30 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்தது.

2.4.2 நீர்க் கட்டணம்

---

மீளாய்வாண்டு ஆரம்பித்தில் ரூபா 506,554 இற்கான நிலுவை ஒன்று காணப்பட்டதுடன் வருட இறுதியில் நிலுவை ரூபா 359,027 ஆக காணப்பட்டது. நிலுவையில் இருந்து அறவீடுகள் நூற்றிற்கு 59 ஆகிய பலவீன மட்டத்தில் காணப்பட்டதினால் எனவே, அத்தொகையை அறவீடு செய்வதற்காக முறையான செயற்திட்டம் ஒன்றினை சபை அமுல் நடத்தி இருக்கவில்லை.

3 செயற்பாட்டு மீளாய்வு

---

3.1 செயலாற்றுகை மதிப்பீடு

---

சமர்பித்திருந்த தகவல்களின் பிரகாரம், 05 நிகழ்ச்சித் திட்டங்கள் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக ரூபா 17,553,223 இற்கான செலவு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது எனினும் அரசாங்க பங்களிப்பு மற்றும் வருமானங்களின் மூலம் நூற்றிற்கு 41 தொகை அளவும் அதாவது ரூபா 7,306,913 மாத்திரமே.

3.2 செயற்பாட்டு திறமையின்மை

---

சபை அதிகாரப் பிரதேசத்தில் காணப்படும் 05 நூலகங்கள் தொடர்பாக ரூபா 43,055 பெறுமதியான வெளியே கொண்டுசெல்லப்பட்டுள்ள 260 புத்தகங்களை அங்கத்தவர்களிடம் திரும்ப பெற்றுக் கொள்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

4 கணக்கு நடவடிக்கை தன்மையும் நல்லாட்சியும்

----------------------------------------------------------------------

4.1 கூட்டிணைப்புத் திட்டம்

---------------------------------

மீளாய்வாண்டின் போது சபையில் கூட்டடிணைப்புத் திட்டம் ஒன்று தயாரித்திருக்கவில்லை.

4.2 கொள்வனவு திட்டம்

----------------------------

ரூபா 37,404,983 இற்கான மூலதன செலவுகள் சபை மேற் கொண்டிருந்தது எனினும் மீளாய்வாண்டிற்கான கொள்வனவு திட்டம் ஒன்று தயாரித்திருக்கவில்லை.

4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

-----------------------------------------------------------------

சபையில் மீளாய்வாண்டின் போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நிறுவப்படாமையால் குழு கூட்டங்கள் நடத்தப்பட்டிருக்கவில்லை.

4.4 அகக் கணக்காய்வு

----------------------------

ஆகக்கணக்காய்வு அலுவலர் ஒருவர் நியமனம் செய்திருந்த போதும் போதியளவு கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

5 முறைமைகள் மற்றும் கட்டுபாடுகள்

----------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகிறது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) ஒப்பந்த நிருவாகம்